சிவமயம்

குமாரகுருபரன்

மலர் 15] 1964-௵ ஆனி-மீ 1 ௳ 14-6-64 [இதழ் 6

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை – 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணி மாலை ... 281
2. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம்.
(Tirumantiram Tantra the fifth) ... 287
3. சூரியனுர் கோயில் ... 290
4. ஏகலைவன் ... 297
5. இராமலிங்க சற்குருபுலம்பற் கண்ணி 302
6. அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள்
(ஆங்கில மொழிபெயர்ப்பு) 303
7. திருவடிப்பெருமை ... 305
8. திருவருட்பயன்—தெளிவுரை ... 308
9. சைவ சமய நோக்கில் கிறித்தவம் ... 312
10. அருள் நூலும் அகப்பொருளும் 317
11. Hymns of the Tamil Saivite Saints 320
12. குறிக்கோளும் ஒழுக்கமும் 321
13. திருவொற்றியூரில் குமரகுருபர சுவாமிகள்
நினைவு நாள் அன்னம்பாலிப்பு நிதி ... 325

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 15 | குரோதி-௵ ஆனித் திங்கள் 1-௳ [14-6-64] | இதழ் 6

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 2)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

3. நேரிசை வெண்பா

“அங்கம் பகுந்தளித்த அம்பலத்தார்க் காம்பலங்கைச்
சங்கொன்று கொங்கைத் தழும்பொன்றே — நங்கையுனை
வந்திப்பார் பெற்றவரம் மற்றொருநீ வாய்த்ததிரு
வுந்திப்பார் ஏழும் ஒருங்கு.”

அங்கம் - உடலுறுப்பு. அங்கி - உடல். சிவன் உமை யம்மைக்குப் பகிர்ந்தளித்தது உடலை. உறுப்பை மட்டும் அன்று.

அர்த்தம் - பாதி. நாரி - பெண். அர்த்தநாரி - பாதி மாது. இங்கு மாதிற்பாதி (அரைப் பெண்) என்று கொள்ளல் கூடும். அது பொருந்தாது. பாதியில் மாது என்றே கொள்ளல் வேண்டும். சிவன் "மாதியலும் பாதியன்." அம்மாது உமையும் ஆம் அரியும் ஆம். அர்த்தநாரீசுவரர், ஹரியர்த்தனர் என்று திருநாமம் இருவேறு இருப்பது சைவர்க்குத் தெரியும். திருவையாற்றில் திருமூலத்தானத்தின் மேற்பால் இலிங்கோற்பவர் இருத்தற் குரிய இடத்தில் ஹரியர்த்தனர் விளங்கி யருள்கின்றார். அங்கு அப்படி அவர் அருள்வதால்தான் அத்தலத்தின் சிறப்பாக, 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்றருளினார் நம் அப்பர். அத்தொடர்ப பொருள் ஏனைத் தலத்திற்குப் பொருந் தாது. 'ஐயாறனார்க்கே அரியலால் தேவியில்லை' என்பதே கருத்து. அது தில்லை யம்பலவாணர்க்குச் சிவகாமி யல்லால் தேவியில்லை என்றாற் போலும்.

பகுந்து – பகிர்ந்து, பகிர்தல் பகுத்தல் என இருவேறு தொழிற் பெயர் உண்டு. 'பகிர்' என்னும் முதனிலையால் பகிர்ந்த, பகிர்கின்ற, பகிரும், பகிர்ந்தான் முதலிய வினைச்சொல் வேறு பாடு தோன்றும். 'பகு' என்னும் முதனிலையால் பகுந்த, பகுத்த, பகுகின்ற, பகுக்கின்ற, பகும், பகுக்கும், பகுந்தான் பகுத்தான் முதலிய தன்வினை + பிறவினைச் சொல் வேறு பாடுதோன்றும். 'பகிர்' என்னும் முதனிலை 'பாகிர்' என முதல் நீளாது 'பகு' என்னும் முதனிலை 'பாகு' என முதல் நீளும். பகுபடுதல் என்பது பாகு படுதல் பாகுபாடு என முதல் நீடல் அறிக. பகுத்திடுதல், பகுத் தீடு, பாத்தீடு, பாதீடு என்னும் சொற்களை ஈண்டுக் கருதுதல் தகும். பகிர்ந்திடுதல் என்றல் பொருந்தலாம். பகிர்த்திடுதல், பார்த்தீடு, பாத்தீடு, பாதீடு எனமருவியதாகக் கொள்ளல் தகாது.

அளித்த – கொடுத்த. அன்பின் முதிர்ச்சி அளி எனப்படும். அன்பால் கொடுப்பதும் அன்பின் முதிர்ச்சியால் கொடுப்பதும் எனக் கொடை இருதிறப்படும். படினும் அன்பின் முதிர்ச்சி யாகிய அளியாற் கொடுத்தலை மட்டும் அளித்தல் என்றனர் முன்னோர். அளியின் தண்மையைக் கருதித் 'தண்ணளி' என்று வழங்கினர் நம் சான்றோர்.

சிவபிரான் உயிர்கள்பால் வைத்த தண்ணளியால்தான் அவற்றிற்குத் தநுகரணபுவந போகங்கள் உண்டாயின. அவை உண்டாதற்கு ஏது அம் முழுமுதல்வன் தனது ஆற்றலைத் தன்னுள் அடக்கியவாறே இராமல், தன்கூருகத் தோற்றிக் காட்டி, எல்லா வுலகமும் ஆக்கினுன்; எல்லாப் பொருள்களையும் தோற்றினுன்; எல்லாம் சத்திய மாக்கினுன். எல்லாம் எங்கும் சிவமயமாக மட்டும் இல்லை. அச் சிவமயத்தொடு சத்திமய மாகவும் இருப்பதன் காரணம் அச்சிவம் தன்னுள் ஒடுங்கி நிற்கும் தனது சத்தியைத் தன்னின் வேருகத் தோற்றியதே ஆகும். அத் தோற்றத்தால்தான், நாம் போக மோட்சங்களைப் பெற வுரியராகின்ருேம். சிவனடிப் பேறு எய்தற் பொருட்டே அத் தோற்றம் (அர்த்தநாரீச்சுரம்) உண்டாயிற்று. ஆதலாற்ருன், நம் அப்பர் சுவாமிகள், "ஒருங்கிநின் கழல்கள் காணப் பாதியோர் பெண்ணை வைத்தாய்" என்று பாடியருளினுர் வேதியனை; வேத கீதனை; மதுரைத் திருவாலவாயில். இச் சிதம்பரம் பொன்னம் பலம். அது வெள்ளியம்பலம். எல்லாம் அம்பலந்தான். இரண்டம் பலமும் இன்ன என்றறியாதாரியல்பும் அம்பலமாவதே. அறி வாரியல்பும் அம்பலமாவதே. அங்கம் பகுந்தளித்த அம்பலத்தார் இயல்பு அம்பலம் ஆயினும் மறையாகவே இருக்கின்றது. என்ன காரணமோ தெரியவில்லை. திருக்கோவையாருள் 'உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்' என்றருளியது யார்க்கு விளங்கும்? அவரே, "உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே" என்னுந் திரு வாசகத்தாலும் அதற்கு விளக்கம் அருளினுர். இதில் 'உணர்ந்த' என்னும் அடையாகிய பெயரெச்சம் கொள்ளும் மாமுனிவர், உம்பர், ஒழிந்தார் (ஏனையோர்) என்னும் பெயர்களின் பொருள் திருக்கோவையாருள் 'உணர்ந்தார்' என்று குறிக்கப்பட்டது. 'ஒழிந்தார்' என்றது 'வீழ்க' 'ஒழிக' என்று குறிக்கப்படும் பொருளிற் கொள்ளற் பாலதன்று. ஒழிதல் என்பது நிற்றல் என்னும் பொருட்டு. அதற்கு இப்போது கொள்ளப்படும் பொருள் எப்போதும் இல்லை. மக்கள் வழக்கு அப்பொருளைத் தோற்றி விட்டது. 'உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்' 'தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்' என்பவை முதலிய திருவாக்குக்களை நோக்கின் உண்மைப்பொருள் புலப்படும். தொல்காப்பியச்

சூத்திரங்களில் இச்சொல் எப்பொருளில் ஆளப்பட்டிருக்கின்றது? உரைகளை நோக்கி யுணர்க. 'ஒழிக' என்னும் அன்பர்கள் இப் பொருளில் இரைகின்றார்கள் என்று கொண்டால் வெறுப்புத் தோன்றாது.

'அங்கம் பகுந்தளித்த அம்பலத்தார்' என்றது அர்த்த நாரீச்சுரரை யாதலின், நடராசரைக் கொள்ளலாமா? இப்படி ஒரு வினா எழலாம் அன்றோ? அதற்கு விடை என்ன? தில்லைச் சிவகாமி யம்மையார் நடராசர் திருமேனியின் ஒரு பாதியாக இல்லாத காரணம் இவ்வினாவைத் தோற்றும். பகுதி – பாதி இரண்டும் ஒரு பொருளன. மாதியலும் பாதி மாதுபாகம் இரண்டும் ஒன்றேயாம். ஆயினும் மாதியலும் பாதி அர்த்த நாரீச்சுவரனை உணர்த்துகின்றது. மாதுபாகன், மங்கைபங்கன் என்பவை அர்த்தநாரீச்சுவரனையும் உணர்த்தும். இடப்பால் மங்கையை உடைய பிறமகேசுர மூர்த்தங்களையும் உணர்த்தும். காரணம் என்ன? மகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்தும் மாது பாக மூர்த்தங்களே ஆகும். சிவம் ஒருமை; அர்த்தநாரீச்சுர மூர்த்தம் இருமை; சாதாக்கியம் மகேச்சுவரம் ஆகிய எல்லாம் பன்மை. தொல்காப்பியர் (1) 'ஓரெழுத்தொருமொழி' (2) ஈரெழுத் தொருமொழி, (3) இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி என மூன்றுணர்த்தியதாலும், (1) ஒருமை (2) சின்மை (3) பன்மை (1) ஒன்று) (2) சில (3) பல என்னும் வழக்குக்களாலும் தமிழிலும் அம் முப்பால் உண்மை கடவுள் நிலையை ஒட்டிய அழியா நிலைமைத்து. இவ்வுண்மையை அறியாதார் "ஒன்றல்லன பல தமிழ்நடை" என்று கூறிவிட்டனர். 'தமி' 'எமி' என்ற சொற் களையும் அவற்றின் ஆட்சியையும் நோக்கி யுணர்தலும் ஈண்டு வேண்டுவதே.

இங்குக் காட்டிய விளக்கத்தால் அறியற்பாலது இது:—

அம்பலத்தார் அங்கம் பகுந்தளித்தவரே யாவார், சிவகாமி யம்மையார் தனியாக இடப்பால் இருப்பினும் ஒருடலின் இரு கூற்றுள் ஒருகூறே யாவார். ஆனதாற்றான், சிதம்பரச்செய்யுட் கோவையின் எழுபதாவது திருப்பாடலில், குமரகுருபரசுவாமிகள்

"இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே

யொருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றம் தோற்றப் புலம்பேல் வாழிமடநெஞ்சே."

என்று இரு கூற்றொரு வடிவாக அம்பலத்தாரை வைத்துப் போற்றியருளினர். இதனாலும், இம் மணிமாலையின் ஆசிரியர் அவரே என்பது உறுதிப்படும்.

மாதியலும் பாதியனே எல்லா மூர்த்தங்களும் உடையவன் என்பது சித்தாந்தம் ஆதலின், இப்படிக் கொள்வார்க்கு இவ் விளக்கம் நலம் விளைக்கும். சிவலிங்கம் நடராசர் இரண்டற்கும் வேறுபாடு கொண்டு தேவாரப் பாடலுக்குப் பொருந்தாப் பொருள் கொள்வதுண்டு. எல்லாம் ஐந்தொழில் முதல்வன் திருவுருவங் களே ஆதலின், எல்லா மூர்த்தங்களையும் அம் முதல்வனாக (அபேதமாக) வழங்குதல் குற்றம் ஆகாது. மூர்த்தி வேறு மூர்த்திமான் வேறு. சாதாக்கியம் மகேசுரம் எல்லாம் மூர்த்தி பேதம். அவற்றின் (உயிர் ஆகி) நின்று, அருள் செய்தல் முதலிய ஐந்தொழிலையும் புரியும் மூர்த்திமான் ஒன்றே. சிவம் ஒன்றே. பல அல்ல. ஆதலின் சிவ பேதம் இல்லை. சிவனுக்குரிய மூர்த்தி (வடிவு) எண்ணில்லாதவை. பஞ்ச சாதாக்கியம் பஞ்ச விம்சதி (25) மகேசுரம் முதலிய பல பல வேடங்கள் எல்லாம் சக்தி மயமாகும். அவையெல்லாம் அருள்மயம் என்றும் மாயா காரியங்களாய் அவை அமைந்தன எனினும் அவ்வருள்மய மாகவே தொழப்பெறும் என்றும் அறிவார்க்கு எல்லா மூர்த்தங் களும் அர்த்த நாரீச்சுர மூர்த்தமே என்பது நன்கு விளங்கும். தட்சிணா மூர்த்தத்தையும் அவ்வாறு தொழுதார் எனில் ஐயம் உற இடம் உண்டோ?

" திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின் றேன்றனைத் திகையாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்த அம்பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே "

என்னுந் திருவிசைப்பாவிற் போற்றியவற்றை உணர்ந்து தென்முகக் கடவுளின் இருவகையுருவமும் மாதியலும் பாதியாதலைக் கொள்க. 'திரிபுவனம்' என்னும் (தருமையாதீனத்) திருக்கோயிலின்கண் தென்முகக் கடவுள் அர்த்தநாரீசுவரராகத் தோற்றம் அருள்வதை அங்குச் சென்று காண்க. இதுவரையில் எழுதியது முதலடியின் முதற்றொடர்க்கு மட்டும் விளக்கமாகும்.

(தொடரும்)

உ
சிவ சிவ

சைவ மெய்யன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

உமாபதி சிவாசாரியார்

அருளிச் செய்த

திருத்தொண்டர் புராண சாரம்

(மூலமும் கதைச் சுருக்கமும்)

திருத்தொண்டத் தொகையின் விரியாகச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ள 4253 பாடல்கள் கொண்ட பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் விடாது சுருக்கி, 75 விருத்தப் பாக்களில், இதன் ஆசிரியர் திட்ப நுட்பம் செறியப் பாடியுள்ளார். பெரிய புராணத்தைப் படிக்க இது சிறந்த, தக்கதோர் தூண்டுகோல் ஆகும்.

கையடக்கமான அழகிய பதிப்பு

விலை **0-40** காசு.

கிடைக்கும் இடங்கள்.

1. **T. M. குமரகுருபரன் பிள்ளை**, B. A., B L.,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்
ஸ்ரீவைகுண்டம்.

2. **திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்**, B. A.,
தியாகராச விலாசம் 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 5.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. மா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 15. இதழ் 5-ன் தொடர்ச்சி

I and Thou are one for Sivagnanam
நானும் தானும் ஒன்றெனை உணர்வதே சிவஞானம்.

23 நானென்றும், தானென்றும் நாடி, நான்சாரவே
தானென்று நானென்று இரண்டிலாத் தற்பரம்
தானென்று நானென்ற தத்துவம் நல்கலால்,
தானென்று நானென்றும் சாற்றகில் லேனே.

I sought Him in terms of I and Thou
But He that knoweth not I from Thou
Taught me the truth I indeed is Thou
And now I talk not of I and Thou.

முதலிலே நானென்றும் நீயென்றும் வேறுபாடு காண இறைவனை நாடலானேன்; ஆனால் நானென்றும் தானென்றும் இரண்டில்லா சிவபரம்பொருள், தானேநான் என்ற உண்மையை எனக்கு அருளினான்; அதிலிருந்து, 'தான்' 'நான்' என்று வேற்றுமையாகப் பேசுவதை நிறுத்தி விட்டேன்.

Salvation is the realisation that I and Thou are one
நானும் தானும் ஒன்றுவதே சாயுச்சிய முத்தி.

24 சாற்றரி தாகிய தத்துவம் சித்தித்தால்,
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்;

ஏற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்,
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே.

When this Truth, beyond words, thou perceiveth
The Siva tatwas five bend below;
The light of Supreme Gnana dawns,
Illumines the Soul's path
To the finite goal of Sayujjya.

சொல்லாலே உணர்த்துதற்கரிய இந்த தத்துவங் கடந்த நிலையை ஆன்மா சென்றடையும் போது, பெறுதற்கரிய ஐந்து சிவ தத்துவங்களும் (நாதம் விந்து, சாதாக்கியம், மகேசுவரி, சுத்த வித்தை) கீழே நின்று விடும்; அந்த நிலையில், ஞானம் பிறக்கும்; பிறக்கின்ற ஞானம் பரசாயுச்சிய முத்திக்கு விளக்காக நிற்கும்.

குறிப்பு: *வரி 2. 'ஆற்றரிதாகிய ஐந்து' என்பதற்கு ஐம்புலன்கள் என்று பொருள் கொள்வாருளர். ஆனால் முன்னே 22-ம் பாட்டில் கூறியதின் தொடர்பாக, நாதாந்த நிலையைக் கடந்த தத்துவ அதீத நிலையே சாயுச்சிய முத்தி என்பதை ஆசிரியர் திருமூலர் வற்புறுத்தினர், என்று கொள்கையில். 'ஐந்து' என்பதற்கு ஐந்து சிவதத்துவங்கள் என்று பொருள் கோடலே சிறப்பாகும்.*

தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம் என்று ஐந்தும் கலையில் ஒடுங்குகின்றன; அக்கலை, நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை சாந்தி, சாந்தியதீதை என ஐவகைப் பட்டு நிற்கும். அவற்றிலே ஆன்மா போகம் புசிப்பதாகப் பாவித்து, முடிவில் சிவமாம் தன்மை எய்தும் என்ப, சிவ ஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்கள். ஆனால் இங்கு முதலடியில் 'தத்துவம்' என்று குறிப்பிட்டுள்ளதால், ஐந்து கலைகளையன்று, ஐந்து தத்துவங்களையே குறிப்பிட்டார் திருமூலர் என்றே கொள்ளல் வேண்டும்.

சுத்தவித்தையே முதலாத் தோன்றுமோர் ஐந்துவகைத்
தத்துவத்தை நீங்கிஅருள் சாருநாள் எந்நாளோ.

என்னும் தாயுமானவர் பாடல் நோக்குக.

Sariya is the breathof Suddha Saivam
சரியை சுத்தசைவத்தின் உயிர்.

25 "நேர்ந்திடு மூல![1] சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும்;" "காலாங்கி! கஞ்ச மலையமான்!

ஓர்ந்திடும் கந்துரு! கேண்மின்கள்! பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து² உயிரதே."

O Thou! Kalangi! Kanja Malayaman! Kanduru!
My loved desciples, this thou understand;
The practice of Sariya is basic to salvation,
And verily is the breath of Suddha saiva
In this world below"—
Thus quoth he—Moola, the Master of many penances.

"தவத்தின் மிக்க எங்கள் குருவே! திருமூல! சரியை நெறியின் இயல்பை எங்களுக்குத் தெளியக் கூறும்" என்று சீடர்கள் கேட்ப, மூலர் அருளுவார். "காலாங்கி! கஞ்ச மலையான்! கந்துரு! கேளுங்கள்: இந்த உலகத்தில் சுத்த சைவ நெறிக்கு சரியை எனும் பாதை உயிர் போன்றதாகும்; இதை நன்கே உணருங்கள்."

குறிப்பு : *இந்தப் பாட்டு கழகப்பதிப்பில் (1942) காணப்படவில்லை.*

பா. பே. ¹ *மூலன்* ² *சைவத்துக்குயிரதே.*

வரி 1. *நேர்ந்திடு – தவமுடைய நேர்தல் (நேர்ச்சை)-தவம்.*
ஆய்ந்திடும் – ஆய்ந்து சொல்லும்

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

சூரியனுர் கோயில்

திரு, K. M. வேங்கடராமையா அவர்கள் M. A.,
திருப்பனந்தாள்.

முன்னுரை :

"ஊரா னோர் தேவகுலம்" என்ற முதுமொழிக்கிணங்கத் தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் திருக் கோயில்கள் உள்ளன. அவற்றுள் பல சைவசமய குரவர்களால் பாடப் பெற்ற சிறப்பு வாய்ந்தவை. அச்சமய குரவர் காலத் துக்குப் பின்னும் பல புதிய கோயில்கள் தோன்றின. தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழேச்சரம், தாராசுரத்து இராசராசேச்சுரம், திருபுவனத்து திருபுவன வீரேச்சுரம் (கம்பஹரேசுவரர் கோயில்), சூரியனுர் கோயில் முதலியவை இவ்வகையைச் சேர்ந்தன வாம். இவற்றுள் சூரியனுர் கோயில் குறித்து இங்கு எழுதப் பெறுகின்றது.

தலக் குறிப்பு :

ஆடுதுறை புகைவண்டி நிலையத்திலிருந்து திருப்பனந் தாளுக்குச் செல்லும் பாதையில் ஏறத் தாழ $1\frac{1}{2}$ கல் தொலைவில் திருமங்கலக்குடி என்ற திருத்தலம் உளது. இஃது ஒரு பாடல் பெற்ற தலம்; காவிரியின் வட கரையில் உள்ள தலங்களுள் ஒன்று. திருமங்கலக்குடி திருக்கோயிலுக்கு இரண்டு பர்லாங்கு தொலைவில் சூரியனுர் கோயில் என்னும் தலமும் கோயிலும் இருக் கின்றன. சூரியனுக்கு அமைந்த கோயில் இருப்பதால் இவ்வூர்க்குச் சூரியனுர் கோயில் என்ற பெயர் அமைந்தது. சிவஞான சித்தியார் எனும் ஞானசாத்திரத்துக்கு உரை எழுதி யவர்களுள் ஒருவராகிய சிவாக்கிர யோகிகள் நிறுவிய திருமடம் ஒன்றும் இத்தலத்தில் உள்ளது. இத்தலத்துக்கு அருகில் திரு

மாந்துறை என்ற சிவஸ்தலம் இருக்கிறது. (சம்பந்தர் பதிகம் பெற்ற திருமாந்துறை வேறு; இத்திருமாந்துறை வேறு). இத் திருமாந்துறைக்கு அருகில் இருப்பதால், சூரியனார் கோயில் திருமாந்துறையோடு இணைத்து வழங்கப் பெறுவதும் உண்டு.

பரிவார மூர்த்தித் தலங்களுள் ஒன்று:

திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமகாலிங்கப் பெருமானை நடுநாயகமாக வமைத்துப் பரிவார மூர்த்திகள் எழுந்தருளியுள்ள தலங்களாகச் சில தலங்கள் அமைந்துள்ளன என்று சிலர் கூறி மகிழ்வதுண்டு. அவர்கள் கூற்றின்படி :—

1. திருவலஞ் சுழி — விநாயகர் தலம்;
2. திருவேரகம் (சுவாமி மலை) — முருகவேள் தலம்;
3. திருச்சேய்நலூர் — சண்டேசுவரர் தலம்;
4. திருவாவடுதுறை — நந்திதேவர் தலம்;
5. சூரியனார் கோயில்—சூரியன் (அல்லது) நவக்கிரகத்தலம்;
6. சீர்காழி — பயிரவர் தலம்;
7. சிதம்பரம் — நடராசர் தலம்;
8. திருவாரூர் — சோமாஸ் கந்தர்தலம்;
9. திருவாலங்குடி — தக்ஷிணாமூர்த்தி தலம்.

இவ்வமைப்பைச் சேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழில், சப்பாணிப் பருவம், எட்டாவது திருப்பாடலிற் காணலாம் : —

திருவலஞ் சுழியைங் கரத்தனா லயமெனத்
　　திருவேரகப் பதியெனும்
　திருநகர முன்பொனு லயமெனச் சேய்ஞலூர்
　　　திகழ்தண்டி யாலயமென
மருவுமா வடுதுறைவன் விடையினா லயமென்ன
　　வந்தசூ ரியனாலயம்
　மகிழ்சூரி யன்கோயி லாமெனச் சீகாழி
　　　வடுகனா லயமாமெனப்
பெருகுசிற் சபைசபா பதியினா லயமெனப்
　　பேசுதிரு வாரூர்நகர்
　பெரியநா யகர்கோயில் என்னவா னோர்களும்
　　　பேணுமிவை மத்தியாகத்

தருமருத வனமகா லிங்கநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே
தந்தைவெண் காடர்புகழ் எந்தைமுரு கேசனே
சப்பாணி கொட்டியருளே.

[குறிப்புரை :— *ஐங்கரத்தன் - விநாயகர்; தண்டி - சண்டேசர், விடை - நந்திதேவர்; சிற்சபை - சிற்றம்பலம்; பெரியநாயகர் - சோமாஸ் கந்தர்; மருதவனம் - திருவிடைமருதூர், மதலை - மகன்.*]

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களும் தாம் பாடிய திருவிடைமருதூர் உலாவில் இதனையே பின்வருமாறு கூறியுள்ளார் :—

"ஒப்பேதும்
இல்லா வலஞ்சுழியே ஏரம்பன் வைப்பாக
மல்லே ரகமுருகன் வைப்பாக — நல்லார் சேர்
தண்மாட ஆப்பாடி தண்டீசன் வைப்பாக
வண்மாந் துறையிரவி வைப்பாக — எண்மாரு
நன்காமர் தில்லை நடராசன் வைப்பாக
மன்காழி யேவடுகன் வைப்பாக — முன்காணும்
தென்னு வடுதுறையூர் சேவமர்வைப் பாவாரூர்
மன்னுசோ மாக்கந்தர் வைப்பாக — உன்னில்
தடைதவிரா லங்குடியா சாரியன்வைப் பாக
இடைமருதில் வீற்றிருக்கும் ஈசன்."

[குறிப்புரை :— *ஏரம்பன் - விநாயகர்; வைப்பு - தலம்; ஆப்பாடி - திருவாப்பாடி, சண்டேசப்பதம் பெற்றதலம்; (சேய்நலூர் என்று க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்கூறும்) மாந்துறை என்றது சூரியனார் கோயிலை; இரவிவைப்பு - சூரியன்தலம்; சே - இடபம்; வடுகன் - பைரவர்; ஆசாரியன் - தக்ஷிணாமூர்த்தி.*]

இவ்வுலா வடிகளில் "மாந்துறை இரவிவைப்பாக" என்றதால், மாந்துறையின் பிடாகையாகச் சூரியனார் கோயில் கருதப்பட்டுவந்தது என அறியலாம். இதிற்கண்ட தக்ஷிணாமூர்த்தி ஆலயமாகிய திருஆலங்குடி, க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் குறிக்கப் பெறவில்லை.

சூரியனுர் கோயில் தோற்றமும் பெயரும்

சூரியனுர் கோயில், 1070 முதல் 1120 வரை அரசாண்ட முதற் குலோத்துங்க சோழனால் கட்டப்பெற்றது, என்பர் ஆராய்ச்சியாளர். (A. R. E. for 1908, paragraph 60; A. R. E. for 1927, paragraph 19). இக்கோயிலில் முதற் குலோத்துங்க சோழனுடைய இரண்டு கல் வெட்டுக்கள் உள்ளன. (229 and 231 of 1927). முன்னதில் "குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலய தேவர்" என்றும், பின்னதில் "குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயத்துச் சூரியதேவர்" என்றும் இக்கோயிற் பெயரும், இக்கோயிலில் எழுந்தருள்விக்கப்பெற்ற இறைவன் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளன. எனவே இக்கோயிலுக்கு அந் நாளில் வழங்கிய பெயர் குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயம் என்றும், இறைவன் பெயர் சூரியதேவர் என்றும் அறியப்பெறும்.

கோயிலமைப்பு

இறையகத்தில் எழுந்தருள் விக்கப் பெற்றவர், சூரியதேவர் ஆவர்; அவருடைய இருமருங்கிலும் உஷாதேவியும் பிரத்தியுஷா தேவியும் உள்ளனர். இறையகப் பகுதியும் முகமண்டபமும் கருங் கல்லால் கட்டப்பெற்றவை. இறையகம் (கருப்பக் கிரகம்) மேற்குப் பார்த்துள்ளது. சூரிய தேவரை நோக்கிய வண்ணமே பிருகஸ்பதி (வியாழன்) அமைக்கப்பெற்றுள்ளார்; அதாவது வியாழன் கிழக்கு நோக்கியுள்ளார். இறையகத்துக்கு வடக்கில் வரிசையாக இராகு, வெள்ளி (சுக்கிரன்) கோயில்களும், இறையகத்துக்குந் கிழக்கில் கேது, சந்திரன், செவ்வாய் (அங்காரகன்) கோயில்களும், தெற்கில் புதன் சனி கோயில்களும் உள்ளன. இச்சிறு கோயில்கள் செங்கற்களால் கட்டப் பெற்றவை. திருக்கோயிலில் எழுந்தருள்விக்கப் பெற்ற இறைவன் பெயர் சூரிய தேவர் என்று இருத்தலையும், சுற்றுக் கோயில்கள் செங்கற் கோயில்களாக இருக்கச் சூரியன் வீற்றிருக்கும் கோயில் மட்டும் கருங்கல்லால் இருத்தலையும், நோக்கின், சூரியன் தவிர்த்து மற்றைக் கோள்களுக்குரிய கோயில்கள் பிற்காலத்தில் அமைக்கப் பெற்றிருத்தல் கூடும், என்று எண்ண இடம் தருகின்றது. எனினும் இதனை ஒருதலையாகத் துணிதற்கில்லை. வியாழன் இருக்கும் மண்டபத்துக்கு முன் உள்ள மண்டபம் சிறிது அகல

மானது. இதில் காசி விசுவநாதர் எழுந்தருளியுள்ளார். அதற்கு முன் மண்டபம் இன்னும் சிறிது அகலமாக உள்ளது; இதில் வடக்குப் பக்கத்தில் உற்சவ மூர்த்திகள் அமைக்கப் பெற்றுள்ள னர். உற்சவ மூர்த்திகள் கண்கவர் வனப்புடன் திகழ்கின்றனர்; இவற்றுள் சூரிய தேவரது திருவுருவம் பெரியது. உற்சவ மூர்த்திகள் உள்ள மண்டபத்துக்கு முன்னுள்ள மண்டபத்தில் 12 தூண்கள் உள. இம்மண்டபம் மிகப் பிற்காலத்ததாதல் கூடும்.

விசுவநாதர் விசாலாக்ஷி :

முக மண்டபத்துக்கு முன் உள்ள மண்டபத்தில் வடகிழக்கு மூலையில் ஓரிலிங்கம் உள்ளது; அவரைக் காசிவிசுவநாதர் என்கிறார்கள். அம்மண்டபத்தின் வடக்குச் சுவரில் விசாலாட்சி அம்மன் எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளார். இவ்விருவரும் இருக்கும் இடத்தை நோக்கின் இத்திருக்கோயில் கட்டப்பெற்ற காலத்திலேயே இவர்கள் எழுந்தருள்விக்கப் பெற்றவர்கள் என்று எவரும் எண்ணமாட்டார்கள். பல பிற கோயில்களிலும் பல தலத்து இலிங்கங்களும் எழுந்தருளச் செய்திருப்பது போல, இத்தலத்திலும், காசிக்குச் சென்று வந்தவர் ஒருவர் ஸ்ரீ விசுவ நாதர் விசாலாட்சியை அமைத்திருப்பார் என்று கொள்ளல் தகும். இவர்களுக்கு என்று அமைந்ததாகவே இங்குள்ள சண்டீசர் கோயிலைக் கொள்ளலாம்.

சூரிய வழிபாடு :

சூரியனை வழிபடுதல் தொன்று தொட்டு இந்நாட்டில் உண்டு. தொல்காப்பியனாரும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பில் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்ற நூற்பாவில், கடவுள் வாழ்த்துக் கூறுதலோடு, ஞாயிறு திங்கள் ஆகியவற்றுக்கும் வாழ்த்துக் கூறுதலைக் கூறியுள்ளார். கொடிநிலை என்பதற்கு ஞாயிறு மண்டிலம் என்றும், வள்ளி என் பதற்குத் திங்கள் மண்டிலம் என்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர். சிலப்பதிகாரத்துள்ளும்,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்"

என்று ஞாயிறு வாழ்த்துக் காணக்கிடக்கிறது இதனால் அந்நாளைய மக்கள் சூரியனை வழிபட்டார்கள் என்பது தெரிய வருகிறது. சிலப்பதிகாரம், கனாத்திறம் உரைத்த காதையில், "பகல் வாயில் உச்சிக் கிழான் கோட்டம்" என்றதினின்று, சூரியனுக்கு அந்நாளில் மதுரையில் தனிக் கோயில் இருந்தமை புலப்படுகிறது. எனவே சூரியனுக்குத் தனிக் கோயில் எடுப்பித்து வழிபடும் வழக்கம் மிகப் பழமையானது என்பது தெளிவு

தனிக் கோயில்கள்

சூரியனைத் திருக்கோயில்களில் ஒன்பது கோள்களுள் (நவக் கிரகங்களுள்) ஒன்றாக வைத்தும், தனியாக வைத்தும் வழிபடுவதுண்டு. திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம், வைகல் மாடக் கோயில், நன்னிலத்துப் பெருங்கோயில், திருப்பருதி நியமம், திருவாவிநன்குடி என்ற சிவத்தலங்களில், இறைவனைச் சூரியன் வழிபட்டுப் பேறுபெற்றதால், இத்தலங்களில் சூரியனுக்குத் தனியிடம் அமைக்கப் பெற்றுள்ளது.*

சூரியனார் கோயிலில்

ஒன்பது கோள்களுக்கும் உரிய கற்படிவங்களைச் (சிலா விக்கிரகங்களை) சில திருக்கோயில்களில் சிவாகம முறைப்படியும், சிலவற்றுள் வேத (வைதிக) முறைப்படியும் அமைத்துள்ளனர்.*

சூரியன் பதுமபீடத்து நடுவண் இருக்கத் திங்கள், புதன் வியாழன், வெள்ளி நான்கு நேர்த் திசையிலும், செவ்வாய், சனி, இராகு, கேது நான்கு கோணத் திக்கிலும் அமைந்து நிற்க ஒன்பது கோள்களையும் அமைப்பது சிவாகம முறைப்படியாவதாகும்.* இந்த முறைப்படிதான் சூரியனார் கோயிலில் ஒன்பது கோள்களுக்கும் கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. முறை கீழே காணலாம்:—

---

* நவக்கிரக மாண்பு-திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்-காசிமடத்துப் பதிப்பு,



கங்கைகொண்ட சோழபுரத்தில்

கங்கைகொண்ட சோழபுரத்துத் திருக்கோயிலில் ஒரே கல்லில் ஒன்பது கோள்களும் செதுக்கப் பெற்றுள்ளது. அதனைச் சூரிய யந்திரம் என்று கூறுகின்றனர். 16, 12, 8, தளங்களை யுடைய பத்மங்கள் ஒன்றன்மேல் ஒன்று இக்கல்லில் அமைக்கப் பெற்றுள்ளன. கீழ்த் தளத்தில் அருணன் ஏழு குதிரைகளுடன் இருப்பது காணத்தக்கது. கந்தர்வ கின்னரர் உருவங்கள் நான்கு மூலைகளிலும் உள்ளன. ஏறத்தாழ 3 × 3 × 1½ அடி அளவில் இந்த ஒற்றைக் கல் சூரிய யந்திரம் அல்லது நவக்கிரக யந்திரம் அமைந்துள்ளது. இதில் சூரியன் நடுவே இருக்க, மேற்கில் சனி, வடமேற்கில் கேது, வடக்கில் வியாழன், வட கிழக்கில் புதன், கிழக்கில் வெள்ளி, தென் கிழக்கில் திங்கள், தெற்கில் செவ்வாய், தென்மேற்கில் இராகு இருத்தல் காணலாம். இது வைதிக முறைப்படி அமைக்கப் பெற்றதாதல் வேண்டும்.

ஏகலைவன்

பேராசிரியர், திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

வாழ்க்கை என்பது படிப்பது, படித்துப் பட்டம் பெறுவது வாழ்வு நடத்துவது என்பது மட்டுமன்று. இளமை முதல் இறுதிவரை சிறந்த இலட்சியத்துடன் வாழ்வதுதான் நல்வாழ்வு என்று கூறப்படும். இலட்சியம் என்பதற்குக் குறிக்கோள் என்பது பொருள். நல்ல குறிக்கோளுடன் வாழ்க்கை நடத்தும் பொழுது ஏதாவது இடையூறு வந்தாலும் அதைப் பொறுமையுடன் பொறுத்துக் குறிக்கோளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்வு மாலுமி இல்லாது, கடலின் கண் செல்லும் கப்பல் போன்றது. குறிக்கோள் என்பது முதுமையில் வருவதல்ல. இளமை முதற்கொண்டே வருவதொன்றாகும். ஏனென்றால் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது அல்லவா? குறிக்கோளுடன் வாழுகின்ற அல்லது வாழ நினைக்கின்ற எவருக்கும் முதலில் துன்பம் வாராது இருப்பதில்லை. எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். அதனால் துன்பம் வந்தாலும் அதனை மன உறுதியோடு காத்து வருவதுதான் சிறந்த பண்பும் பயனும் ஆகும். அப்படிக் காத்தவர்களில் ஏகலைவன் ஒருவன்.

ஏகலைவன் என்பவன் ஒரு வேட அரசனின் மகன். இவனுடைய தந்தை இரணியதனுஸ் என்பவன். ஏகலைவன் காட்டில் வாழும் வாழ்க்கை உடையவன், வேடர் தலைமகனின் புதல்வன். சூழ்நிலைக்கு ஏற்றவாறுதானே ஒருவன் வாழ்க்கையும் அமையும். ஆதலால் அவனுக்கு இளமையிலிருந்தே வில் வித்தை பயில வேண்டுமென்ற விருப்பம் இருந்தது. அப்பொழுது வில்வித்தை

திருச்சி வானொலி நிலையத்தில் பேசிய இச்சொற்பொழிவு அந்நிலையத்தாரின் அனுமதியுடன் ஈண்டுப் பதிப்பிக்கப்படுகிறது.

கற்பிப்பதில் சிறந்த குருவாக விளங்கியவர் துரோணர் ஆவர். அவர்தான் பாண்டவர்களுக்கும் துரியோதனன் முதலியவர் களுக்கும் வில் வித்தை கற்றுக் கொடுத்து வந்தார். ஆதலால் ஏகலைவன் துரோணரிடம் சென்று வில் வித்தை பயில வேண்டும் என நினைத்தான். ஒரு நாள் ஏகலைவன் துரோணரிடத்துச் சென்று தான் வில் வித்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தைச் சொல்லி வழிபட்டு நின்றான். துரோணர் அவன் வேடர் தலைமகனின் மகன் என்ற காரணத்தால் வில் வித்தை கற்றுக் கொடுக்க மறுத்தார். "வில் வித்தையில் சிறந்தவன் ஆவாய்" என ஆசி மட்டும் கூறி விடை கொடுத்து விட்டார். அவனும் துயரத்துடன் வீடு திரும்பினான். கல்வி கற்க வேண்டு மென்று விரும்புகின்ற மாணவர்களுக்குத் தாம் பயில இடமில் லாது இருப்பதைவிடக் கவலைதரும் செய்தி வேறில்லை. ஏகலைவன் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. என்றாலும் அவன் வில் வித்தை பயில வேண்டுமென்ற குறிக்கோளை மட்டும் விடவில்லை. எப்படியாகிலும் வில் வித்தையில் சிறந்தவன் ஆக வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் உறுதியாக நிலைபெற்றி ருந்தது. வித்தை பயில வேண்டுமென்றால் குரு வேண்டுமே! "குருவில்லா வித்தை பாழ்" என்பது முதுரை அல்லவா! என் செய்வான்! துரோணர் போன்றதொரு உருவச்சிலையை அமைத் தான்! அச்சிலை தனக்குப் பாடம் கற்பிக்காது, தன் பாடத்தையும் கேட்காது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் தனக்குக் கற்றுக் கொடுக்க மறுத்த துரோணரது உருவச்சிலையே வைத்து வழிபட விரும்பினான். சிலையிடம் வணங்க முடியுமே தவிரக் கற்றுக்கொள்ள இயலாது அல்லவா! ஆதலால் துரோணரிடம் வில்வித்தைக் கற்றுக் கொண்டி ருந்த பாண்டவ துரியோதனர் முதலியோர் பயிலும் பொழுது அதைப் பார்த்துக் கற்றுக் கொண்டான். இவ்வாறாக இவனது கலை சிறப்பாக வளரலாயிற்று. நாளடைவில் வில் வித்தையில் தனக்கு நிகரில்லை என்னும் படியாக ஆகிவிட்டான்.

ஒரு நாள் துரோணரிடத்துக் கற்றுவந்த குருகுல மாணவர் களாகிய பாண்டவ துரியோதனன் முதலியோர், அவரது கட்ட ளைப்படி காட்டிற்கு வேட்டை ஆடச் சென்றார்கள். அப்பொழுது

ஒரு மனிதன் ஒரு நாயைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு அக்காட்டிற்கு வந்தான். ஏகலைவனும் அங்கு வேட்டையாடும் பொருட்டு வந்திருந்தான். அந்த நாய் ஏகலைவனைப் பார்த்துக் குரைத்தது. உடனே அவன் அந்த நாயின் வாயில் ஏழு பாணங்களை ஒரு கொத்தாக விடுத்தான். ஏழு அம்புகளையும் தாங்கிக் கொண்டு அந்த நாய் துன்புற்று ஓடியதைப் பாண்டவ துரியோதனர் கண்டார்கள். அவ்வாறு யாவரும் வியக்கத் தக்க முறையில் ஏழு அம்புகள் எய்தவன் ஏகலைவன் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு நாள் அர்ச்சுனன் துரோணரிடம் சென்று தன்னைவிட ஏகலைவன் சிறந்திருப்பதை எடுத்துக் கூறினான். அதனைக் கேட்ட துரோணர் ஏகலைவனிடம் சென்றார். தன்னுடைய மாணவன் என்று சொல்லும் ஏகலைவனிடம் குரு காணிக்கை கேட்டார். அவர் விரும்பியபடி தனது வலது கைப் பெருவிரலைக் காணிக்கையாக மனமுவந்து கொடுத்தான்.

தனக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்க மறுத்த துரோணரிடமும் பேரன்பு கொண்டிருந்தான். ''குருவில்லா வித்தை பாழ்'' என்ற பழமொழியை உணர்ந்து அவர் உருவத்தை அமைத்து உள்ளன்போடு வழிபட்டு வந்தான். "எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்ற முதுரையை அவன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகினான். தனக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்காமலிருந்தும், துரோணர் குருகாணிக்கை கேட்ட பொழுது தயங்காமல் அவர் விரும்பிய வண்ணம் தனது வலதுகைப் பெருவிரலை வெட்டிக் கொடுத்தான். என்னே ஏகலைவன் பெருந்தன்மை!

பாரத நாட்டு வரலாற்று ஏட்டிலே ஏகலைவனைப் போல் குருபக்தி கொண்டவர்கள் பலர் காணப்படுகின்றனர். துரோணரிடத்தில் அர்ச்சுனன் சிறந்த முறையில் வில்வித்தை கற்றுக் கொண்டான். ஒருசமயம் தன்னுடைய குருவாகிய துரோணரிடத்திலேயே, தான் போர்செய்ய வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது அர்ச்சுனனுக்குத் தன் இளமை வாழ்வு நினைவுக்கு வந்தது. ஏதும் அறியாத தன்னை வில்வித்தையில் சிறந்தவனாக ஆக்கியவர் யார் என்ற எண்ணமும் உடன் எழுந்தது. அவர் துரோணர் அல்லவா! உடனே அவன் உள்ளம்

உருகியது. தனக்குக் கற்றுக்கொடுத்த குருவோடு போர் தொடுப்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்ருகும் என்று நினைத்தான். நினைந்து கூறிய பாடல் வருமாறு.

"யாதும்ஒன்று அறியா என்னை இவனலாது இலைஎன்று இந்த
மேதினி மதிக்கு மாறு வில்முதல் படைகள் யாவும்
தீதறத் தந்த உண்மைத் தெய்வம்நீ என்ருல் பஞ்ச
பாதகந் தன்னில் ஒன்றுஉன் பதயுகம் பிழைப்பது ஐயா"

மற்றும் ஒரு நிகழ்ச்சியும் இவ்விடத்தில் நினைவு கொள்ளலாம். ஒருநாள் கௌசிக முனிவரும் இராமனும் காட்டிற்குச் சென்ருர்கள். அப்பொழுது தாடகை என்ற பெண் ஒருத்தி அவர்கள் முன்னே தோன்றினுள். அவள் தனக்குத் தீங்கிழைக்க நினைத்ததையும் கருதாது பெண் என்ற ஒரு காரணத்தால் கொல்லாது விடுத்தான் இராமன். ஆனுல் தன்னுடன் இருந்த கௌசிக முனிவர் அவளால் வரும் தீங்கை எடுத்துக் கூறிக் கொல்லும்படி சொன்னுர். உடனே இராமன் அவர் கட்டளையைத் தலைமேற் கொண்டு கூறுகின்ருன். அறன் அல்லாதவற்றை குரு செய்யும்படிச் சொன்னுலும் அதைச்செய்து முடிப்பதே தலையாய கடமை யாகும். குரு கூறிய வாக்கை வேதவாக்காகக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகின்ருன். அப்பாடல் வருமாறு.

"ஐயன் அங்கது கேட்டு அறன் அல்லவும்
எய்தினுல் அதுசெய்க வென்றே விஞல்
மெய்ய! நின்னுரை வேதம் எனக்கொரு
செய்கை யன்ருே அறஞ்செய்யும் ஆறென்ருன்."

ஏகலைவன் வேடர் குடியில் தோன்றினுலும் நல்ல பண்புகள் நிரம்பப் பெற்றிருந்தான். செய்நன்றி மறவாமல் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்ற பொய்யா மொழிக்கு எடுத்துக் காட்டாகத் தனது வலது கைப்பெரு விரலையும் கொடுத்தான். மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன் என ஐங்குரவரில் ஒருவராக குரு பாராட்டப் பட்டிருப்பதையும் தெரிந்திருந்தான்.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி அடையார்" என்பது போல குரு தனக்கு வில் வித்தை கற்றுக் கொடுக்காவிட்டாலும், இடையறாது முயன்று கற்று வெற்றி பெற்றான். மேலும் பெரியவர்களுடைய ஆசியினால் நல்ல பயன் கிடைக்கும் என்பதையும் அவன் தெரிந்திருந்தான்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்ற புறநானூற்றுப் பாடற் பகுதிக்கு இலக்காக ஏகலைவன் தனது ஆசிரியர்க்கு உறுபொருளினும் மேலான தன்னுடைய உறுப்பையே கொடுத்தும், அவரது உருவத்தை அமைத்து வெறுப்பின்றி வழிபட்டும் வந்தான். இவ்வாறு குருபக்தியில் மேம்பட்டு விளங்கிய ஏகலைவனுடைய வரலாறு மகா பாரதத்தில் வாரணவதச் சருக்கத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அப் பாடல் வருமாறு:

"ஏகலைவன் என்று ஒரு கிராதன் முனியைத் தனி
இறைஞ்சி யிவன் ஏவலின்வழான்
ஆகலை அடைந்து மிகுபக்தியொடு நாடொறும்
அருச்சனை ஒத்து வருவான்
மேகலை நெடுங்கடல் வளைந்த தரணிக்கண் ஒருவில்லி
யென வின்மை உடையான்
மாகலை நிறைந்து குருதக்கிணை வலக்கை யினில்
வில்விரல் வழங்கி யுளனால்."

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 15, இதழ் 5-ன் தொடர்ச்சி]

திருவருட் பாவில் — திருவடிப் புகழ்ச்சி
பருவமில்லாக் காலம் — படிக்கவைத்த சற்குருவே. 131

பாடவகைக் கேற்ற — படிப்பில்லா நாயேனைப்
பாடவகை செய்தருளும் — பண்புடைய சற்குருவே. 132

உன்னருளால் கீர்த்தனைகள் — ஓதியதைப் பாடென்றே
நன்னயமாய்க் கேட்டருளும் — நண்புடைய சற்குருவே. 133

சித்திபுரத் தென்பால் — திகழ்மேட்டுக் குப்பமதைச்
சித்தி வளாகமெனச் — செப்பவைத்த சற்குருவே. 134

தேக மயக்கமதைத் — தெண்ணீற்றினுல் கணத்தில்
ஏகவருள் செய்த — இராமலிங்க சற்குருவே. 135

உன்தனக்கு யோகம் — உதவுவேன் பின்பென்றே
என்தனக் கன்போடு — இயம்பியருள் சற்குருவே. 136

திருவா சகத்தின் — திருவகவல் முன்சொற்கு
இருபான் இலக்கணங்கள் — ஈண்டருளுஞ் சற்குருவே. 137

தைப்பூச காலம் — தரிசனைசெய்வோர்க் கெல்லா
மைப்பூசுங் கண்ணர்மயல் — மாறுமென்ற சற்குருவே. 138

மாசிதைத் திங்களிலே — வையகத்துறங் கெனற்கே
ஆசிகலோர் உண்மை — யருளியவென் சற்குருவே. 139

முதற்பாக் குறளின் — முதற்றே யெனற்கே
முதற்கடவுள் என்று — மொழிந்தருளுஞ் சற்குருவே. 140

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

SAINT APPAR AND HIS HYMNS

அப்பர் சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

திருவையாறு　　　பண் காந்தாரம்　　　4-ம் திருமுறை

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்.

"I followed the people going to the shrine with water and flower singing the praise of my lord, who wears the crescent moon and of Parvati, his consort; I reached Tiruvaiyaru without trekking the distance and there I saw an elephant coming with the female one. In that I saw His Feet; I saw many things which I had not hitherto seen."

He continued his pilgrimage and met St. Tirugnanasambandar, who was returning from Madurai after vanquishing the jains there. St. Appar joined the palanquin bearers and carried the boy saint and surprised the latter with his humility. Then leaving him to tour Tondaimandalam, St. Appar went to Madurai and was greeted by the Pandya king, his queen and his minister. He then visited Rameshwaram and came to Tiruppugalur.

There when he was removing the weeds from the temple precincts he found gold coins and precious stones, but unaffected by their presence he continued his work throwing them away along with the weeds. One more test awaited him. Beautiful girls from heaven danced before him seducingly. He was not affected by this. Then they prostrated before him and went away.

The time had come when he had to shed his mortal coil. He prayed to the Lord at Tiruppugalur to give him shelter at His feet. The saint's prayer was answered.

(தொடரும்)

இராகம் : பாகேஸ்வரி தாளம் : ஆதி

பல்லவி

நெஞ்சம் மறப்பதில்லை நாயகன் கழலினை
குஞ்சரி வள்ளிமணா வாளனின் புகழினை (நெஞ்சம்)

அநுபல்லவி

தஞ்சம் என்றடைந்தோர்க்கு அபயம் கொடுத்தருளும்
செஞ்சடையோன் பெற்ற சீலனின் புகழ்பாட (நெஞ்சம்)

சரணம்

அண்டசராசரம் எதிலும் நிறைந்து நிற்கும்
அனைத்துயிரையும் காக்கும் ஐயன்—அருள்பெறவே
தண்மதி அணிந்திடும் தீனதயாபரனின்
கண்மணி போன்றிடும் கந்தன் கருணையினை. (நெஞ்சம்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருவடிப் பெருமை

திரு. G. விநாயகம் அவர்கள், M. A.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

—o—

உலகம் யாவையும் உருவாக்கியும், காத்தும், அழித்தும், அருளியும். திருவிளையாடல் புரியும் இறைவனது பெருமையும், அவன் தன் கருணையும், கரைகாண ஒண்ணு, மாகடல் எனத் தகும். அவன் அருளின்றி ஓர் அணுவும் அசையாது. இன்பமும் துன்பமும் இல்லாஞகிய அவ் இறைவன் திருவடியை வணங்கி, பற்றிக் கொண்டு, அவன் அருளைப் பெறுதலன்றி, இவ்வுலகில் பேரின்பம் பிறிதொன்றில்லை. தாயினும் சிறந்த அன்புடையவனும், அடியார்கள் உள்ளங்களைக் கோயிலாகக் கொண்டவனும், ஆன சிவபெருமான் திருவடி ஓர் வற்ருத பேரின்ப வெள்ளம். ஆராத இன்பம் அருளும் அவ் இறைவனுடைய திருவடி இன்பத்தைப் பருகிய, அடியார்கள் எப்பொழுதும் அச்சுவையை அருந்த வேண்டுகின்றனர். அவ்வாறு சுவைத்த திருநாவுக்கரசர் சிவபெருமானை ஓர் வரம் தர வேண்டிக் கொள்கின்ருர்.

“புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்.”

இவ்வாறு அடியார்கள் நைந்துருகும், திருவடியின் பெருமை, சொல்லுதற்கரியது.

அடியார்களை ஆட்டி வைக்கும் தீவினைகளை நீக்குவிக்கும், தில்லைச் சிற்றம்பலக் கூத்தனின் திருவடிப் பெருமையைப் பாடிய நாவுக்கரசர் இத்திருவடியின் மகிமை எத்தன்மை வாய்ந்ததெனக் கூறுகிருர். அடியார்களை ஆட்கொள்ள வந்தது இப்பொற்பாதம் என்றும், இத்திருத்தாள் அழிக்கவும் வல்லது என்றும், அழித்துச் சிலரை ஆட்கொள்ளவே இவ்வுலகில் தோன்றியுளது என்றும் இயம்புகின்ருர்.

"சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன் றோநம்மை ஆட்கொண்டதே."

இறைவன் அடியார்களுடைய உண்மையான அன்பிற்கு எப்பொழுதும் பாத்திரமானவன். சிறந்த அடியார் சிந்தனை யினின்று இமைப்பொழுதும் விட்டு அகலாத சிவபெருமானுடைய திருவடி ஓர் ஆனந்த மலை. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, பிறவிப் பெருங்கடலைக் கடந்து, எப்பொழுதும் நிலை யாக உள்ள பேரின்ப வெள்ளத்தைப் பருகுதல் அன்றி இவ்வுலகில் வேறு செயல் இருக்கமுடியுமோ? பிறவிக்கடலுள் வீழ்த்தப்பட்ட மனிதர்கள் மீண்டும் மீண்டும் பாவங்களைச் செய்து, பிறவியைப் பெருக்கி அதில் இடர்ப்பட்டு, இன்னல் அடைகிறார்கள். அல்லற் பிறவியை அறுத்து, பாவங்களினின்று, விடுவித்துக் கொண்டு, வீடு பேறு அடையச் செய்பவன் இறைவன். இவ்வாறு பிறந்த பிறப்பறுக்கும் இறைவன்பால் அன்பு செலுத்தும் மெய் அன்பர்கள் பற்றவேண்டிய பற்றுக்கோலை ஞானசம்பந்தர் கூறுகின்றார்.

"முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே."

கருணைக் கடலாகிய இறைவன் மக்கள் உய்யும் பொருட்டு, திருமாலும், அயனும் காணாத பாதத்தை எடுத்து ஆடி, பற்ற வேண்டிய இடம் இதுதான் என்று காட்டிய வண்ணம், திரு நடனக்கோலம் புரிகின்றார் தில்லையில். ஆ ஆ! அவர் சிவனடி யாரை சீராட்டும் திறங்கள் என்னே! கருணை வெள்ளப் பொரு ளாகிய சிவபெருமான் காமனை எரித்தார். ஆனால் அவரை நினைந்து பாடும் அடியவர் எவருக்கும் இல்லை என்னாமல் தன் அருளை வழங்கிப் பெரும் துணையாகிய திருவடியை அடையச் செய்கின்றார். பெருமை மிக்க அத்திருவடியைப் பற்றிய அனுபவ நிலையைச் சுந்தரர் கூறுகின்றார்.

"நரைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவார் எல்லார்க்கு மில்லை என்னா தருள்செய்வார்

பறையார் முழவம் பாட்டோடு பயிலுந்தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.”

உயிர்த் தோற்றத்திற்கும், காப்பிற்கும், அழிவிற்கும் அருளு வதற்கும் மூல காரணமாகிய இறைவன் திருவடிப் பெருமையை மணிவாசகப் பெருமான், மிக அழகாகக் கூறுகின்றூர்.

“போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி! எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி! எல்லாவுலர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றி! யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழிநீராடேலோ ரெம்பாவாய்!”

தேனினும் இனியசுவை கொடுக்கும், இறைவன் திருவடி யின் பெருமை கூறுதற்கரியது. இனிய சுவை கொடுக்கும் இறைவன் திருவருளை, பருகி இன்புறுமல் ஒழிந்தால் அரிய தொரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்களாகின்றேம். திருவடியின் சுவையின் பயன் அடையாத மக்கள் எல்லாவுயிர் களினும், கடைப்பட்டவர்களாகின்றுர்கள். அத்தேனின் சுவை யறிந்து, தன்மை அறிந்து, பயன் அறிந்து அதனைப் பருகிய அப்பர் கூறும் கூற்று,

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றுல்
மனித்தப் பிறவியு வேண்டுவதே இந்த மாநிலத்தே.”

திருவருட்பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 15. இதழ் 5-இன் தொடர்ச்சி)

7. உயிர் விளக்கம்

அஃதாவது உயிர் ஆணவ மலம் நீங்கப் பெற்றுத் தன் செயலின்றித் திருவருள் வயப்பட்டு விளக்கமுற்று விளங்கும் நிலையாகும். இதனை வடநூலார் ஆன்மசுத்தி என்பர். மேல் குருவருளால் திருவருளை அறியும் முறைமை கூறினார்; இனி அவ்வருளால் உயிர் விளக்கம் பெறுமாற்றை இவ்வதிகாரத்தில் கூறுகின்றார் ஆகலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

61. தூநிழல்ஆர் தற்குஆரும் சொல்லார் தொகும்இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம்.

(தெ—ரை) வெயிலால் வெதும்பியவன் தூய நிழலைச் சேர்தற்கு அங்கே அடைக என எவரும் சொல்ல வேண்டுவதில்லை. அவன் தானாகவே ஓடிச் சேருவான். பொருந்திய இந்த முறைமை போல உலகியல் துன்பங்களில் வருந்திய ஒருவன் திருவருள் நிழல் கண்டதும் அவன் தானே விரைவில் அடைந்து அதுவதுவாய் நிற்பன் என்பதாம்.

இன்ப துன்பங்களின் உவர்ப்பே திருவருள் வேட்கையைப் பிறப்பிக்கும் என்பது இதன் கருத்தாகும். இதற்கு இவ்வாறன்றி "ஆதித்தன் உச்சியிலே வந்த காலத்துப் பவித்திரமாகிய ஆதித்தனுடைய நிழல் அதற்குள்ளே அடங்குகிறதற்கு ஒருத்தரும் உபசாரம் சொல்ல வேண்டுவதில்லை; இந்த முறைமையைப்

போல இருவினை ஒப்பு வந்த காலத்துத் திருவருள் வந்து அவனைக் கவளீகரித்துக் கொள்ளுதற்கு ஒருவர் சொல்ல வேண்டுவதில்லை"[1] எனவும்; ஒருவனுடைய நல்ல நிழலானது தனக்குள்ளே வியாப்பியமாக அடங்குதற்கு அந்த நிழலிடம் யாரும் சொல்ல வேண்டியதில்லை. நிழல் தானே வந்து சேரும் தன்மை போல, ஆன்மா திருவருளை யடைவதற்கு உரிய தரத்தினை யாரும் சொல்ல வேண்டியதில்லை. இருவினையொப்பு நேர்ந்ததும் ஆன்மா தானாகவே அருளோடு பொருந்தும்"[2] எனவும் உரைப்பாரும் உளர்.

62. தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தின் தான்தவிர்ந்த பின்.

(தெ–ரை) பித்த நோயுடையார் தம் நாக்கிற்குத் தித்திக்கும் பாலும் கசப்பாக இருக்கும்; அப்பித்த நோயி னின்றும் நீங்கியபின் நாவிற்கு முன்கசப்பாக இருந்த பால் *தித்திக்கத்தக்கதாகத் திருந்தி விடும்.* அவ்வாறே உயிர் மல இருள் உற்றிருக்கும் பொழுது இறைவனது மறைப்பாற்றல் (திரோதான சத்தி) கசப்பாக இருக்கும்; அம்மல இருள் நீங்கிய பொழுது அக்கசப்பான மறைப்பாற்றலே இனிக்கும் என்பதாம்.

இது ஒட்டணியாகும். பித்த நோயின்றி நன்கிருக்கும் நாவிற்குப் பாலின் இனிமை நன்கு விளங்குதல் போல மலப் *பிணிப்பின்றி இயல்பிலிருக்கும் உயிர்க்கு இறைவனது அருட்* சத்தியின் இனிமை நன்கு விளங்கும் என்பது இதன் கருத்தாகும்.

63. காண்பான் ஒளிஇருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விழும்?

(தெ–ரை) உயிர் ஆணவ மலத்தில் கட்டுண்டு கிடந்து மயங்கும்போது ஒளிவடிவாகிய திருவருள் தன்னைக் காட்டிட அதனைக்காணும் உயிர் தானே அத்திருவருளைக் கண்டதாக நினைதல் பெரும் பாவமே ஆகும். அது எந்நாள் நீங்கும்? என்பதாம்.

---

[1] *சிந்தனையுரை,* [2] *திரு. தே. ஆ. சீனிவாசன் அவர்கள்.*

காண்பான்-காணுகின்ற உயிர். ஒளி-திருவருள். இருள்-ஆணவ மலம். திருவருள் தன்னைக் காட்டக் கண்டிடும் உயிர் தானே அதனைக் கண்டதாக நினைதல் பெரும்பாவம் என்பது கருத்து. "அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் இப் படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்ற திருவாக்கும் ஈண்டு உணர்தற்குரியது.

64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

(தெ-ரை) குருடர் ஒளியின் மேன்மையையும், இருளின் கீழ்மையையும் அறிய இயலுவதில்லை, ஒன்றாக மதிப்பர். அது போல உயிர், இறை, தளை இவற்றின் உண்மையை அறியா தார்க்கும் இறையின் மேன்மையும் தளையின் கீழ்மையும் அறிய இயலாது என்பதாம்.

பன்மை - உயிர், இறை, தளை இவற்றின் பன்மை. பொருளில் தெளியார் என்ற சொல் உளது. அதற்கேற்ப உவமையிலும் குருடன் என்ற சொல் வரவழைக்கப்பட்டது; ஒளியும் இருளும் ஒன்றாகத் தெரிதல் அவர்க்கேயாதலின்.

இதற்கு இங்ஙனமன்றி "திருவருளும் ஆணவமும் தன் வகைப் பொருளைக் காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன, அவைகளுக்குள்ள பேதம் யாதெனில், அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப் பொருளைக் காட்டுவதும், ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய் யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்" [1] என்பாரும் உளர். எனவே அருள் தெளிவைக் காட்டும; இருள் மருளைக் காட்டும் என்பது இவர்கள் கருத்து. இவர்கள் கருத்தின்படி பன்மை என்பது வேற்றுமை என்று பொருள்படும்.

65. கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க்(கு) அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று.

---

[1] *சிவபாத சுந்தரம்.*

(தெ - ரை) அருளாகிய நல்ல நட்பைப் பெற்றார்க்கல்லது தமது பாரம் முழுவதையும் எடுத்துச் சுமக்கும் இறைவன் கிட்டுதல் கூடுமோ? கூடாது என்பதாம்.

இறைவனது திருவருளாலேயே இறைவனைப் பெறவேண்டும் என்பது கருத்து. உயிர்கள் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள் பிறந்த உடம்பால் முகந்து நின்றவற்றைப் 'பிராரத்துவம்' என்பர். அதனைத் துய்க்கும் பொழுதே மேன்மேலும் செய்கின்ற வினைகளை ஆகாமியம் என்பர். இவ்விரண்டும் திருவருள்வழி நடப்போரை அணுகா என்பதாம். உயிர்கட்குரிய பாரமாகிய இவற்றை எடுத்துச் சுமத்தலாவது இவை அவ்வுயிர்கள் மாட்டு அணுகாமல் செய்வதே யாகும். "அரன் பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்" (சித்தியார் - சுபக்கம்-304) என்னும் திரு வாக்கும் இவ்வுண்மையை விளக்கி நிற்கும்.

உயிர்க்குயிராய்த் திருவருள் நிற்றலாலும், உயிரை நல் வழிப் படுத்தற்காம் துணை அதனினுாங்கு வேறு இல்லை யாதலா னும் அதனை 'நற்கேண்மை' என்றார். நற்கேண்மையார்-சரியை கிரியா யோகங்களை அனுட்டித்து முடித்து ஞானபாதக் கேள்வி யையுடைய பேர்கள் என உரை காண்பர் சிந்தனையுரைகாரர். இக்குறட்பாவினை ஒட்டணியாகக் கொண்டு அதற்கேற்பப் பொருளை வரவழைத்து உரைகாண்பர் நிரம்ப அழகிய தேசிகரும், சு. சிவபாத சுந்தரம் அவர்களும் அவ்வுரை வருமாறு:— அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவர்களுக்கல்லாமல் அவர்களுடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இப்போது பெற்றுக் கொள்ளுதல் கூடுமோ? கூடாது. அதுபோல பேரன்பாகிய திருவருளைச் சார்ந்தவர்களுக்கு அவர் களுடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதில் தோன்றுவர்.

"கிடைக்கத் தகுமே" எனப் பாடங்கொள்வர் சிந்தனையுரை காரர், நிரம்ப அழகிய தேசிகர், தே. ஆ. சீனிவாசன் ஆகியோர். "நற்கேண்மையார்க்கு எல்லாம்" எனப் பாடங் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர்.

(தொடரும்)

சைவ சமய நோக்கில் கிறித்தவம்

திரு. தா. ஐ. ஏசுதாஸ் அவர்கள், எம். ஏ., எம். லிட்.,
தத்துவத் துணைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கிறித்தவ சமயத்தின் அடிப்படை நூலாகிய பைபிள் எனப் படும் விவிலியம் அறுபத்தியாறு பகுதிகளைக் கொண்டது. இது இரு பெரும் பகுதிகளாப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒன்று பழைய ஏற்பாடு; மற்றொன்று புதிய ஏற்பாடு. முன்னது முப்பத் தொன்பது பகுதிகளையும், பின்னது இருபத்தேழு பகுதிகளையும் கொண்டது. பழைய ஏறபாடு வரலாறும் தீர்க்க தரிசனங்களும் கொண்டது; எபிரேய மொழியில் ஆதியில் ஆக்கப்பட்டது. வட மொழியிலுள்ள சைவ ஆகமங்கள் போன்றது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து பாகங்கள் முறையே ஆதியாகமம், யாத்திரையாகமம் லேவிய ராகமம், எண்ணாகமம், உபாகமம், என்றே கூறப்படுகின்றன.

புதிய ஏற்பாடு வரலாறு, கடிதங்கள், தீர்க்கதரிசனம் ஆகியவை கொண்ட பகுதி. இவற்றைத் திருமுறைகளுக்கு ஒப்பிடலாம். திருமுறை சரித்திர அடிப்படையில் தொகுக்கப் படவில்லை. அது போன்றே புதிய ஏறபாடும் உள்ளது. தோத் திரத்திற்கு முன்னிடம் கொடுக்கிறது திருமுறை; ஆனால் சாத்திரக் கருத்துக்களும் அதில் உண்டு. அதேபோல் புதிய ஏற்பாட்டில் காலத்தால் பிற்பட்ட சுவிசேஷங்கள் முன்னாக வைக்கப்பட்டு காலத்தால் முற்பட்ட நிருபங்கள் பின்னாக வைக் கப்பட்டுள்ளன. சுவிசேஷங்கள் கிறிஸ்துவின் புகழ் பாடினாலும் கிறிஸ்தவ தத்துவமும் அடங்கியதாகும். புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் ஆகியது. திருமுறை திருநெறிய தமிழ்.

சுவிசேஷத்தை எழுதியவர்கள் நால்வர். இவர்கள் மத்தேயு மார்க்கு, லூக்கா, யோவான் என்ற சமயாசாரியர்கள். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைப்

போன்றவர்கள். நான்கு சுவிசேஷமும் மனிதன், சிங்கம் ஆடு, கழுகு ஆகியவற்றின் தன்மைக்கு ஒப்பிடப்படுவதுண்டு. சைவ நால்வர், மகன், அடிமை, நண்பன், தலைவி ஆகியவர்களுக்கு ஒப்பிடுவதுபோல் இருக்கிறது இது. மூவர் முதலிகள் அருளிய திருப்பாடல்கள் தேவாரம் என்றும், தொகுப்பாக அடங்கன் முறை என்றும், அழைக்கப்படுவதுபோல், முதல் மூன்று சுவி சேஷம், வரலாற்று சுவிசேஷங்கள் எனப்படுகின்றன. மாணிக்க வாசகர் பாடல்கள் திருவாசகம் என்று குறிப்பிடுவதுபோல் யோவான் சுவிசேஷம் நான்காம் சுவிசேஷம் என்றழைக்கப் படுகிறது. மேலும், மாணிக்கவாசகரது இயற்பெயர் திருவாத வூரர். இது போன்று நான்காம் சுவிசேஷகரின் பெயர் யோவான் அல்ல என்றும் கூறப்படுகிறது. திருவாசகம் மிக ஆழமான சமய அனுபவத்தை விளக்குகிறது. அதுபோன்றே நான்காம் சுவிசேஷம் வரலாற்றைச் சுருக்கிக்கொண்டு அனுபவத்தின் ஆழத்தைக் காட்டுகிறது. ‘கிறிஸ்தவ சமயம் பத்தி மார்க்கம்’ என்றமகுடமிடப்பட்ட ஆங்கில நூலிலே பிஷப் அப்பாசாமி திரு வாசகத்தையும் நான்காம் சுவிசேஷகத்தையும் ஒப்பிடுகிறார்.

எளியோரும் பயனடையும்படி அளவில் அதிகமாகவுள்ள தேவாரத்தை அகத்தியர் தேவாரத்திரட்டு, அருள்முறைத் திரட்டுகள் உள்ளது போன்று சிறுவர்களும் பயனடையும்படி விவிலியத்திலுள்ள நூறுகதைகளைத் திரட்டிய தொகுப்பு ஒன்று உள்ளது. தேவாரத்திலுள்ள சுந்தரரின் திருத்தொண்டத் தொகை தொண்டர்சீர் பரவுவது போல புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரேயர் நிருபம் பதினோராம் அதிகாரம் விசுவாசிகள் எனப்படும் பக்தர் களைப்பற்றிய உன்னதப்பாட்டு.

ஆன்மா முத்தி அடைய சாதனம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சைவ சித்தாந்தத்தில் பேசப்படுகிறது. இந்த நான்கு வழிகளும் விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது என்று திருவாசகமணி பாலசுப்பிரமணிய முதலியார் தமது திருவாசக மொழி பெயர்ப்பு நூலில் எடுத்துக் காட்டுகின்றார்.

“யாவும் அவன் உடைமை, யாரும் அவன் அடிமை” என்ற சிவபத்தர் அனுபவம் ‘பூமியும் அதன் நிறைவும் கடவுளுடையது”

'நானும் என் வீட்டாருமோ வெனில் கடவுளையே சேவிப்போம்; என்ற விவிலிய வசனங்களை நினைவுபடுத்துகின்றன.

சைவத்தில் ஆணவம், மாயை, கர்மம் ஆகியவை மும்மலங்களாகவும் தளைகளாகவும் பேசப்படுகின்றன. விவிலியத்திலும் இவற்றைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆணவம் ஆதியாகமத்தில் குறிக்கப்படுகின்றது என்று மறைமலை அடிகள் எழுதியுள்ளார். சகசமலம், மூலமலம், எனப்படும் ஆணவம் போன்றது ஜன்மபாவம் என்கிறுர் புலவர் போப் ஐயர். மாயையைப்பற்றி சாலமோன் அரசர் பேசுகிறுர். கர்மத்தைப்பற்றி ஏசுநாதரிடம் குறிப்பாக ஒரு குருடன் கண்ணை இழந்து தவிப்பது அவன் செய்த கர்மம் காரணமாகவா, அல்லது அவன் பெற்ருேர் செய்த கர்மம் காரணமாகவா என்று கேட்கப்படுகிறது. ஆனுல் கிறித்தவத்தில் மூன்று பந்தங்களாகக் குறிப்பிடப்படுபவை பிசாசு, லோகம், மாமிசம்.

இனி, கடவுட் கொள்கையைப் பார்ப்போம். அன்பே சிவம்; சிவன் ஒளிப்பிழம்பு; சிவனின் ஜீவன்; சத்தி. கிறித்தவத்தில் கடவுள் அன்பு, ஒளி, ஜீவன், ஆவி என்று கூறப்படுகிறது. சிவனும் சக்தியாகிய உமையும், குமரனும் சேர்ந்துள்ள மூர்த்தம் சோமாஸ்கந்த மூர்த்தம். கிறித்தவ பரத்துவத்தில் பிதா, குமரக் கடவுளாகிய கிறிஸ்து, பரிசுத்த ஆவி ஆகிய சத்தி ஆகிய மூவர் இணைந்துள்ளனர். திரித்துவக் கடவுள் என்றும், திரிஏகக் கடவுள் என்றும் திரித்துவம் என்றும் இவ்விணைப்பு பேசப்படுகிறது.

திரித்துவக் கொள்கை ஒரு கிறிஸ்தவ இரகசியம். நெருப்பில் ஒளி, வெப்பம், தூய்மைப் படுத்துதல் ஆகியவை ஒருங்கே இருப்பதுபோல் இது இருக்கின்றது என்கிறுர் அகுஸ்தீன். இந்த திருத்துவம், மூன்றில் ஒன்ருய் இருத்தல், சைவத்தின் இரகசியமான இரண்டற்ற ஒன்ருகிய அத்வைதம் போன்றது. சைவ சித்தாந்த அத்வைத இரகசியம் ஒன்ருய், உடனுய், வேருய் இருத்தல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்று.

அருள்நந்தி சிவாச்சாரியார் போன்றவர் சின்னப்பர் என்றழைக்கப்படும் பவுல். அருள்நந்தி சகலாகம பண்டிதர். பவுல

நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த, சிறந்த, அழுத்தமான, படிப் பாளி. சைவ சித்தாந்தத்தில் சிவஞான சித்தியாரைப் போன்றது பல கடிதங்கள் அடங்கிய பவுல சித்தாந்தப் பகுதிகள். சித்தி யாரில் புருஷதத்துவம் விளக்கப் படுவதைப் போன்று புனித பவுல் அப்போஸ்தலரும் புருஷ தத்துவத்தைப் பகுத்துக் காட்டு கிறார். மனிதன் என்பவன் உடல், உள்ளம், மனச்சாட்சி, ஆன்மா, ஆவி ஆகியவற்றின் சேர்க்கை என்கிறார்.

ஆன்மா சார்ந்ததின் தன்மைத்து என்கிறது சைவசித் தாந்தம். இவ்வுண்மையை விவிலியம், ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது என்று கூறிவிளக்கு கிறது. இரண்டு எஜமான்கள் என இங்கு குறிப்பிடப்படுவது கடவுளும், பிசாசும் (உலகமும்).

ஆன்மா ஐம்புல வேடரால் அலைந்து கெடுவதை விளக்க சைவத்தில் ஒரு அரசிளங் குமரன் நாடோடிக் கூட்டத்தில் மாட்டிக்கொண்டு தன்னை அறியாமல் போவதைக் கூறுகிறது. இதைப் போன்றதே விவிலியத்தில் கூறப்படும் கெட்ட குமாரன் கதையும் உளது.

பௌராணிக சைவத்தில் பல உலகங்கள் பேசப்படுவது போன்று கிறிஸ்து தமது சீஷர்களுக்கு போதித்த செபத்திலும், அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம் என்றழைக்கப்படும் கிறிஸ் தவ சித்தாந்தக் கொள்கையிலும் பரலோகம், பூலோகம், பாதள லோகம், ஆகியவை உண்டெனக் கொள்ளப் படுகின்றன.

கோயில் என்பது அரசன் வீடு; ஆண்டவனை ஆலயத்தில் வழிபடும் முறைகள் ஒரு அரசனுக்குச் செய்யும் உபசாரம் போன்றது. ஆலயம், ஆன்மா தங்கி இருக்கும் இடம்; ஆணவம் அடங்கி இருக்க வேண்டிய இடம். இது சைவக் கொள்கை. கிறிஸ்தவ சிந்தனையில் ஆலயம் தோணிபுரம் போன்றது. பெரும் பிரளயம் வந்த காலத்தில் நோவாவும் உயிர்வர்க்கங்களும் ஒரு பெரும் பேழையில் ஒளிந்து கொண்டு உய்ந்ததைப் போன்று ஆன்மாவைப் பாவ வெள்ளத்திலிருந்து காக்கக் கூடியது ஆலயத்தில் நடைபெறும் வழிபாடு. மேலும் அரசருக்கு அரச

ராகியக் கடவுளைத் தீர்க்கதரிசியாகிய ஏசாயா ஆலயத்தில் கண் டான் என்று விவிலியம் விளம்புகிறது.

திருத்தொண்டர், நாயன்மார், சமயாசாரியர், சந்தான ஆசாரியர் என்று சைவத்தில் கூறப்படுவது போல் கிறித்தவத் தில் விசுவாசிகள், சீஷர்கள், அப்போஸ்தலர்கள், மிசியோனரி கள் ஆகியவர்கள் உள்ளனர். சங்கம், அடியவர் கூட்டம் எனச் சைவசமயத்தில் போற்றப்படும் திருக்கூட்டம் கிறித்தவத்தில் பரிசுத்தவான்களின் ஐக்கியம் எனவும், திருச்சபை எனவும் கூறப்படுகிறது.

அன்பு சீரிய சைவப் பண்பு. திருமூலர் திருமந்திரத்தில் இதனை எவ்வளவு உயர்த்திக் கூற முடியுமோ அவ்வளவு உயர்த் திக் கூறுகிறார். விவிலியத்தில் கொரிந்தியருக்கு எழுதப் பட்ட முதல் கடிதத்தின் பதின்மூன்றும் அத்தியாயம் அன்பின் உன்னதப்பாட்டாகும்.

பரிசுத்த ஆவியின் பண்டிகை எனப்படுவது தெய்வசத்தி வழிபாடு. பரிசுத்தவானின் திருநாள் குருபூஜை போன்றது.

ஞானஸ்நானம் எனப்படும் திருமுழுக்கு, நாமகரணம் செய்யும் சடங்கு. திருவிருந்து எனப்படுவது சாமாராதனை, மகேஸ்வரபூசை போன்றது. திடப்படுத்தல் அல்லது நன்மை எனப்படும் சடங்கு சமய தீக்ஷையாகும்.

பசுக்களாகிய ஆன்மாக்கள் பாசத்தை ஒழித்துக் தம்மையும் தலைவனையும் அறிந்து, எவ்வுயிரிலும் இலங்கும் இறைவனாகிய சிவனைக் கண்டு, எல்லா உயிர்க்கும் அன்பு செய்து, முப்பொருள் களில் முதற்பொருளாகிய பதியை அடைவதே சைவசமயம். "உன் கடவுளாகிய கர்த்தரிடத்தில் உன் முழுஇருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனத்தோடும் அன்பு கூர வேண்டும்; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல உன் அயலானிடத்திலும் அன்பு கூர வேண்டும்" என்பது கிறித்தவ சமயத்தின் பிழிவு.

அருள் நூலும் அகப்பொருளும்

திரு. A. C. ஷண்முக நயினார் அவர்கள்,
அட்வகேட், தென்காசி.

அருள் நூலென்பது இறைவனருள் கொண்டு ஆக்கப் பட்ட நூல். இறைவன் அருள் பெற்றவரால் ஆயவை. அவ் வருளைப் பெறுதற்கு ஒரு வழியாய நூலென்றுங் கொள்ளலாம். இந்நூல் இறைவன் குணங்களைப் புகழ்ந்து அவன் தன்மைகளை வியந்து சிற்றறிவும் சிறுதொழிலும் சின்னாட் பல்பிணியுமுள்ள நம் போன்ற மக்களுக்கு அவன் இயல்புகளை இனிய பாக்கள் வாயிலாக உணர்த்துவதால் இறைவனைப்பற்றிய அறிவு கைகூடும். இறைவனையே பாடுவதால் நூல் முழுதும் அருள் மணம் கமழும். பயில்பவர் மனம் தூய்மையடையும். அகத் தினிருள் சிறிது சிறிதாக நீங்க அருள்ஒளி பிறக்கும். ஆகவே அருள் நூல்கள் இறைவனருள் பெற்றவர்களால் ஆக்கப் பெற்று அவனறிவு பெறவும் அவன் தன்மைகளை உணரவும் அவனருள் ஈட்டவும் ஓர் சிறந்த புனித வழியாகும். தேவாரம், திருவாசகம் மற்றுந் திருமுறைகள் திருவாய்மொழி திருப்புகழ் குமரகுருபரர் பாக்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

அகப் பொருள் என்பது யாது? அகப்பொருள் மக்கள் உள்ளத்தில் நிகழ்வது. உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகள். அறிவுகள். இவ்வுணர்ச்சிகளும் அறிவுகளும் உள்ளத்தையும் உயிரையுஞ் சார்ந்தவையாகவேயிருக்கும். உள்ளந் தவிர உடலை யும் வெளி உலகத்தையும் பற்றிநிற்கும் புறப்பொருள் போலல்ல. ஆகவே பொருள் அகம் புறம் என இருவகைப் பட்டு முறையே உள்ளத்தையும் உலகத்தையும் பற்றி நிற்கும் (Subjective and objective).

உள்ளத்தில் நிகழ்வனவற்றை அறிவுப் பகுதி என்றும் உணர்ச்சிப் பகுதியென்றும் பிரிக்கலாம். (Intellectual and emotional) உள்ளத்தில் எழுகின்ற அறிவு ஒருபொருளைக் காட்டும் ஒளி என்போமாயின் உணர்ச்சி அப்பொருளின் சுவை

யாகும் என்றார் ஓர் அறிஞர். இதனால் உணர்ச்சி அறிவைவிட மிக நுண்ணிய பொருள் என்று தெரிகிறது. உணர்ச்சி பல வகைப்படும். அவற்றுள் நகை (சிரிப்பு) அழுகை இழிவரல் (தாழுதல்) மருட்கை (மயக்கம், வியப்பு) அச்சம், பெருமிதம், வெகுளி (சினம் வெறுப்பு) உவகை (விருப்பம்) அன்பு என்பன சில பிரிவுகளாகும். ஆயின் எல்லாப் பிரிவுகளுக்கும் அடிகோலி யாய் நிற்பது உணர்ச்சி. இவற்றுள் சிறந்து நிற்பது அன்பினாற் பிறக்கும் உவகை.

அன்பு என்னும் அருங்குணம் நாடு, குலம், சமயம், தொழில், செல்வம் முதலான பலவகைப் பட்ட வேறுபாடுகள் உயர்வு தாழ்வுகளில் உள்ள மக்களை, உயிர்கள் என்ற இயல்பில் வேறு பாடின்றி ஒன்றாகவே கருதும். அவ்வன்பு கடவுள் ஒருவனுடன் அவ்வுயிர்களை இசைவிக்கும். அன்றியும் அவ்வன்பு கடவுள் வடிவமாகவே நிற்கும். இவ்வுண்மையை யாவரும் அறிவதில்லை. அன்பு வேறு கடவுள் வேறு என்று கூறுவர் அறிவில்லாதவர் கள். வேறில்லை. ஒன்றென்று அறிந்தால் கடவுளாகவேயிருப்பர். என்னே அன்புடைமை.

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. *திருமூலர்.*

இவ்வன்பும் பல திறப்படும். இறைவன் உயிர்கள்பால் அன்பு செலுத்துங்கால் அருள் எனவும், உயிர்கள் இறைவன்பால் செலுத்துங்கால் பக்தி எனவும், ஓர் உயிர் மற்றொரு உயிர் பால் செலுத்துங்கால் நண்பு எனவும், ஒருவன் ஒருத்திபால் நிகழ்த்துங்கால் காதல் எனவும் பலவாறாகப் பேசப்படும். இவ் வாறு பல திறப்பட்டுப் பற்பல தன்மைகள் உடையனவாயினும் அவற்றையெல்லாம் இயக்குவது உணர்ச்சியே.

உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் இன்பத்தையே நாடு கின்றன. இன்பம் புறப்பொருளாலும் அகப்பொருளாலும் பிறக்கும். அகப் பொருளாய்ப் பிறக்குமிடங்களில் உருவிலும் திருவிலும் குணத்திலும் குலத்திலும் ஒத்து அறிவும் அவாவும்

உடைய தலைமகனும் தலைமகளும் தனியிடத்திலே வேட்கை வயத்தராய் எதிர்ப்பட்டுக் கூடிய இன்ப வாழ்க்கையில் நிகழுங் காதலன்பாவது எவ்வாறிருந்ததென்று அவ்விருவருள் ஒருவரை ஒருவர் வினவத் தமக்குப் புலப்படக் கூறப்படாததாய் உள்ளத்துள்ளே நுகர்வதாய் அகத்தே நிகழ்வதன்றிப் புறத்தார்க்கும் பேசப் படாததாய் நிற்பதால் காதலின்பம் சிறந்த அகப்பொருளாகக் கொள்ளப்படுகிறது. இந்த இன்பம் பல பிறவிகளில் தொடர்ந்து பிறந்தும் மறைந்தும் குறைந்தும் பெருகியும் வரும். இதற்கு உழுவலன்பு என்று பெயர். ஆயின் இந்த அன்பால் விளைவது சிற்றின்பம். தலைமகனுக்கும் தலைமகளுக்கும் நிகழ்வதொப்பக் கடவுளுக்கும் உயிர்களுக்கும் நிகழ்கின்ற இன்பம் நிலைபெற்றதாய் உயிர் இறுதியாய் கடைய வேண்டிய நிலையாகலான் பேரின்பமெனப்படும். இந்த இன்பமே மிகமிகப் பெரியதும் உண்மையுமான அகப்பொருளின்பம். ஆகப் புறப்பொருள் அறம் பொருள்பற்றி நிற்கும். அகப்பொருள் இன்பம் பற்றி நிற்கும். புறப்பொருள் அறம் பொருள் பற்றிச் செய்யுஞ் செய்கைகளை கண்ணுற்காணும் காட்சிப் பொருளாய்ப் பிறர் அறிக் கூடியன வாய்ப்பிறர்க்கு உணர்த்தக் கூடியனவாயிருக்கும். அகப்பொருள் உள்ளத்தில் நுகர்வதாய் பிறர் அறிய முடியாததாய் பிறர்க்கு உணர்த்தக் கூடாததாயுமிருக்கும். அகத்தே நிகழ்கின்ற இன்பத்துக்கு அகம் என்றது ஓர் ஆகுபெயர்.

அகப்பொருள் இலக்கணங்களைத் தொல்காப்பியம் பொருளதிகாரத்திலும் இறையனுரைகப் பொருள் நற்கவிராசநம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் முதலிய நூல்களிலும் விரிவாகக் காணலாம். இவற்றிற்கு இலக்கியமாயுள்ள சங்கநூல்களில் ஒன்ருகிய பரிபாடல் மணிவாசப் பெருமான் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையார், பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவை, திருக்குறள் இன்பப்பால் முதலியன. எனினும் தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா முதலியவற்றில் அகப்பொருளாகிய காதலன்பின் பல துறைகளைப் படித்து அநுபவிக்கலாம். இனி அகப்பொருட்கும் அருள் நூலுக்கும் உள்ள தொடர்பைச் சிறிது சிந்திப்போம்.

(தொடரும்.)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 15, இதழ் 5-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

43. தலையேநீவணங்காய்—தலை—மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்—தலையேநீவணங்காய்.

Our next hymn with the short - lined verses (nos. 43 to 48) is a kind of Saivite consecration hymn, mentioning successively various parts of the body-head, eyes, ears—to be given to the worship of Siva. Verse 46 must sound sadly to a Saivite, for it is frequently sung in the ears of the dying, as a plaintive appeal to think of God. Verse 47 rises far above the usual ideas of future absorption to the thought of a blissful state of communion with and praise of God.

43. Head of mine, bow to Him,
    True Head, skull garlanded,
A skull was His strange begging-bowl,
    Bow low to Him, my head.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

குறிக்கோளும் ஒழுக்கமும்

வித்துவான். திரு. நடேச நாராயணன்,
வாலாசாபாத்து.

படகும் துடுப்பும் :

மனம், குறித்த ஒரு பொருளில் நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தது அல்ல. அது ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாறி எங்கெல்லாமோ தாவிச் செல்லக் கூடியது. அதைக் குறிப்பிட்ட நெறியில் உய்ப்பது கடினம்தான். அதனாலேயே மணிவாசகப் பெருமான்,

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்புலன்"

என்றார். சுந்தரமூர்த்தி நாயனாரும்,

"ஐவர் கொண்டிங்கு ஆட்ட வாடி
ஆழ்குழிப்பட்டு அழுந்துவேன்"

என்று பாடினார். இதனால் மனத்தைக் கயிறறுந்த காற்றாடி யாகவும் துடுப்பொடிந்த படகாகவும் கருதலாம். காற்றாடியைக் கட்டுப்படுத்தி மேலே உயர்த்தக் கயிறு இன்றியமையாததுபோல கட்டறுத்தோடும் மனத்துக்கு, அறிவு இன்றியமையாததாகும். படகைக் குறித்த திசையில் ஒழுங்காகச் செலுத்தி முன்னேற்றத் துடுப்பு இன்றியமையாததுபோல ஒழுங்கின்றி அமையும் உள் ளத்துக்கு, ஞானம் இன்றியமையாததாகும்.

இல்லையானால் கயிறறுந்த காற்றாடி, ஆடி அசைந்து கீழே விழுந்து கிழிந்து குலைவது போல் மனமும், மத்திட்ட தயிர்போல உடைந்து கலங்கி உருக்கெட்டுப்போகும். துடுப்பொடிந்த படகு திசை மாறிச் சென்று அலையில் சிக்கி உருண்டு புரண்டு மூழ்கி ஒழிவது போல மனமும், பாழ்வாழ்வெனுமிப் படுமாயை யிலே விழுந்து முழுகிப் பயனற்று அழியும்.

அவ்வாறு கெடாமல் மனத்தைக் காத்தல் வேண்டும். காத்தால் வாழ்வு உயர்வது மட்டுமன்றி மேலுலக வாழ்வாகிய நிலத்துக்கும் அவன் வித்தாவான். இதனை வள்ளுவர் குறளால் அறியலாம்.

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

பொறிகள் யானைகளைப் போன்றவை. அவற்றை அறிவாகிய அங்குசங் கொண்டு அடக்கி நெறிப்படுத்த வேண்டும். அவ்வாறு நெறிப்படுத்தி அதிலேயே நிலைத்தால் அவன் வானுலக நிலத்துக்கு வளமுள்ள வித்தாவான். அதை விடுத்து 'இது நல்லது; இது கெட்டது' என்று பகுத்துணராமல் பாழ்பட்ட வழி செல்வானாயின் அவன் விலங்குக்கு ஒப்பாகவே கருதப்படுவான் என்று கம்பர் கூறுகிறார்.

" தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே" (இராமாயணம்)

மனத்தை அடக்கி வெற்றிபெற வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி, அந்த மனத்தை அறிவின் துணையால் ஏதாவதொரு நல்ல குறிக்கோளில் செலுத்துவதுதான். நற்குறிக்கோள் ஒன்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்தவர் எவராயினும் அவர்களது வாழ்க்கை (தனிப்பட்ட வகையில் ஒருகால் சில குறைகள் இருந்துவிட நேரினும்) வெற்றியான வாழ்க்கையாக – புகழ் மிக்க வாழ்க்கையாக நாட்டுக்கே பயனுடைய வாழ்க்கை யாக அமைத்துவிட்டிருப்பதைக் காணலாம்.

இதனால்தான் திருநாவுக்கரசு நாயனார் குறிக்கோளின் சிறப்பை வற்புறுத்தினார். குறிக்கோள் இல்லாததாலேயே தான் கெட்டுவிட்டதாக மக்களின் நிலையைத் தன்மேல் ஏற்றிப் புனைவாகப் பாடினார்.

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பும் வந்து

கோலனாய்க் கழிந்த நாளும்
"குறிக்கோள்" இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே.

எனவே இளமையிலேயே ஒவ்வொருவரும் தம் வாழ்வுக்கு ஏதாவது ஒரு நல்ல குறிக்கோளைப் பற்றுக் கோடாகக் கொண்டு அந்நெறியிலேயே சென்று உயர்ந்திடல் வேண்டும்.

வீடும் சுவரும்

வாழ்க்கையில் மேன்மை அடைய வேண்டும் என்றால் அதற்கு வழி என்ன? இவ்வினாவிற்கு அவரவர்கள் தங்கள் அனுபவத்தையே விடையாகச் சொல்வர். ஓர் சிறந்த எழுத்தாளனைக் கேட்டால் 'பேனா ஒன்றே வாழ்க்கையில் மேன்மை தரும்' என்பான். கலைஞன் ஒருவனைக் கேட்டால் 'கலை ஒன்றே வாழ்க்கையின் மேன்மை தரும்' என்பான். உழைப்பாளன் ஒருவனைக் கேட்டால் 'உழைப்பு ஒன்றே மேன்மை தரும்' என்பான்.

மேற் கூறியவர்களின் கூற்றில் ஓரளவுதான் உண்மை உள்ளது; முழுதும் பொருந்திவிடாது. அவர்கள் ஓர் அடிப்படையை மறந்து தங்கள் முடிவைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் வள்ளுவரோ இப்பேர்க்கொத்தவரன்று. அவர் எதையும் அடிப்படையிலிருந்து ஆராய்பவர். அதனால் அவரது கருத்து முழுதும் பொருந்துவதாகவே அமையும். வாழ்க்கையில் மேன்மை அடைவதற்கு அவர் காட்டும் வழி இதுதான்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

இதைக் கேட்டதும் நாம் 'இவ்வளவு தானா' என்று அக்கறையின்றிப் புறக்கணிக்கலாம். ஆனால் உண்மை இதில்தான் உள்ளது. நிலைத்த மேன்மையை ஒழுக்கம் ஒன்றினால்தான் எய்த முடியும். மற்றவற்றால் வரும மேன்மை நிலைத்த மேன்மையாக, மாறாத மேன்மையாக இருக்க முடியாது. ஒரு கணம் வேறு வகையாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்த உண்மை புலப்படும்.

ஒழுக்கம் இல்லாதவனிடம் இருக்கும் பேனா நல்லவற்றை எழுதாமல் தீயவற்றை எழுதி மக்களைக் கெடுக்கும். நாட்டுக்கும்

சமயத்துக்கும் மாசு உண்டாக்கும். ஒழுக்கத்தில் பற்று இல்லாதவனிடம் அமைந்த கலை, அவனுடைய புலன்களைக் கெடுத்து அவனையே அழிக்கும். ஒழுக்கம் இல்லாதவனின் உழைப்பு, பொது நன்மைக்கும் ஆக்கத்துக்கும் பயன்படாமல் சுய நலத்துக்கும் அழிவுக்கும் பயனாகிவிடும். நாட்டில் நிலவும் பல்வேறு செயல்களிலும் கருத்துச் செலுத்திப் பார்த்தால் இந்த உண்மையை அறியலாம்.

எனவே எந்த ஆற்றலும் கெடாமல் விளங்க வேண்டும் எனின் அதற்கு அடிப்படை ஒழுக்கம் தான். ஒழுக்கம் இல்லாமல் எத்தகைய ஆற்றலை வளர்த்துக் கொள்ளினும் அது நித்தியத்துவமான நிறை நலத்தை, மேன்மையை அளிக்காது. மேன்மை என்பது ஆற்றலில் இல்லை; அதன் பயனில் இருக்கிறது. எனவே பயன் நன்றாயமைய வேண்டுமாயின் அதற்கு ஒழுக்கமே அடிப்படை.

ஒழுக்கம் மனித வாழ்வுக்கே அரணாக விளங்குகின்றது. இன்னும் ஆழ்ந்து சிந்தித்தால் மேலும் ஒரு உண்மை விளங்கும். சுவர்கள் வீட்டுக்கு வேலிமட்டும் – பாதுகாப்பு மட்டும் – அல்ல, அந்தச் சுவர்கள் இல்லா விட்டால் வீடும் இல்லை. ஒழுக்கத்தின் நிலையும் இதுவே. ஒழுக்கம் மனிதனின் ஆற்றலுக்கு அரணாகவும் உள்ளது. அதே நேரத்தில் அந்த ஆற்றல் இடையீடின்றித் தொடர்ந்து வளரக் காரணமாகவும் உள்ளது.

“மனித வாழ்க்கை வீடு என்று சொன்னால் ஒழுக்கமே அதன்சுவர்கள் ஆகும். வீட்டை நன்கு பாதுகாக்க விரும்புபவன் சுவர்களையும் பாதுகாக்க வேண்டும். சுவரின்றேல் வீடும் இல்லை என்ற தெளிவும் அச்சமும் எல்லோர்க்கும் உண்டாக வேண்டும்.”

இதுகாறும் கூறியவற்றால் குறிக்கோளால் மேன்மை அடைய வேண்டும் என்றால் அதற்கு ஒழுக்கமே அடிப்படையாய் இருக்கவேண்டும். மனம் அடங்க, குறிக்கோள் வேண்டும். குறிக்கோள் மேன்மை தர ஒழுக்கம் வேண்டும்.

சிவ சிவ

திருவொற்றியூரில்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
நினைவு நாள் அன்னம்பாலிப்பு நிதி ரூ. 5000/-.

திருஞானசம்பந்தரால் பஞ்சமப்பண்ணில் பதிகமொன்றும், திருநாவுக்கரசரால் திருநேரிசையையும், திருவிருத்தமும், திருக்குறுந்தொகையும், திருத்தாண்டகமும், சுந்தரரால் தக்கேசிப் பண்ணில் ஒன்றும், குறிஞ்சிப்பண்ணில் ஒன்றும் ஆக எட்டுத் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற சிறப்புடையதும்,

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியாரைச் சுந்தரர் மணம் புணர்ந்த தலமாகியதும்,

சுந்தரர் சங்கிலியாருக்கு மகிழமரத்தின்கீழ்ப் பிரமாணம் செய்து கொடுத்த ஐதீகம் மகிழடி சேவை என்று மாசித் திங்களில் நடத்தப்பெறுவதும்,

‘கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலனுய்க்
கும்பத் தயிலம்விற் றும்செக் குழன்றுங்கொள் கூலியினல்
நம்பற் கெரித்த கலிஒற்றி மாநகர்ச் சக்கிரியே’

என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறியவாறு கலிய நாயனுர் திருவிளக்குத் திருத்தொண்டு செய்த தலமாகியதும்,

திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது பாடிய பட்டினத்தடிகள் முத்தியடைந்த முதுபதியாயதும்

ஆதிபுரி என்று கூறப்படுவதும்,

வாசுகியை இறைவர் தமது திருவுருவத்திற் சேர்த்துக் கொண்டமையால் ‘படம்பக்கநாதர்’ என்றும், ஏலேல சிங்கருக்கு மாணிக்கக்கல் கொடுத்து ‘மாணிக்கத் தியாகர்’ என்றும், தலங்களில் கட்டளைகள் குறைத்து எழுதிய ஏட்டில் ‘திருவொற்றியூர் நீங்கலாக’ என்று எழுதினதால் ‘எழுத்தறியும் பெருமான்’ என்றும் திருநாமங்கள் பூண்ட இறைவன் உறையும் இடமாய

தும், தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று யதும், ஆகிய திருவொற்றியூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறு எய்திய நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியையில் அன்னம் பாலித்தற் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'திருவொற்றியூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000/- (ரூபா ஐயாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. சர்க்கார் கடன் பத்திரம் எண். சிஏ. 244572 – ரூ. 5000/- இந்நிதி நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும்.

3. இச் சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டுதோறும் திருவொற்றியூரில், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியை நாளில், அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு நடத்தப்பெறும்.

4. ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடத்தப் பெற்று வரும்.

5. இத் தருமம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது. இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெறும். இந்நிதி அரசியலாரால் திருப்பி அளிக்கப்பெறின் அதிகவட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப் பெறும்.

'ஒற்றிமாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி.'

Tirupanandal
Dated 21-2-1964. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 22-2-1964 as No. 12, Book 4 volume 50, pages 258 to 260.